**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 268 of 2022**

Prosecution witness LW2 (PW2) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 03.07.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி . சல்மா | Husband Name | : | திரு.யாரப் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் ஒசூர் பார்வதி நகரில் குடியிருந்து வருகிறேன். என் வீட்டுக்காரர் பெயர் யாரப். சாட்சி சொல்லிவிட்டு போன பாஷா என் மகன் . எத்தனை வருடமாக ஹவுஸ் கான் (எ) கௌஸ்கானும் என் கணவரும் நண்பர்கள் என்ற விவரம் தெரியாது, ஆனால் ஒரே ஏரியாவில் வசித்து வந்தார்கள் . ஹவுஸ் கான் குள்ளாவின் அக்கா அஸ்வினியை காதல் திருமணம் செய்து கொண்டார். அஸ்வினியை கௌஸ்கான் சாகடித்துவிட்டார் . 01.04.2022 தேதி மதியம் 2.00 மணிக்கு அஸ்மா போன் செய்து என் கணவர் யாரப்பை கொலை செய்துவிட்டதாகவும் வந்து பார்க்குமாறு சொன்னார் . என் கணவரை ராடால் அடித்து , கல்லை எடுத்து தலைமீது போட்டு குள்ளா கொலை செய்துவிட்டார் என்று அஸ்மா என்னிடம் சொன்னார். நான் அந்த இடத்திற்கு 3.00 மணிக்கு போயிருந்தேன். என் கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு அடையாளம் தெரியாமல் இருந்தார். உடல் முழுவதும் அடி இருந்தது. என் மகன் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

3.00 மணிக்கு நான் போய் பார்க்கும்போது போலீசார் அந்த இடத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு தான் நானும் பாஷாவும் மாலை 5.00–6.00 மணிக்கு காவல் நிலையம் போனோம் . அதன்பிறகு பாஷாவிடம் கையெழுத்து வாங்கினார்களா என்று சொன்னால் நான் கையெழுத்து போடவில்லை பாஷா போட்டியிருப்பார் . குள்ளாவை ஸ்டேசனில் வைத்திருந்ததை நான் ஏதும் பார்க்கவில்லை . போலீசார் என்னை ஸ்டேசனில் விசாரிக்கவில்லை என்றும் வேறு எங்கு வைத்தும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான் . போலீசார் நான் சம்பவ இடத்திற்கு போன போது பாடியை மட்டும் எடுத்து அனுப்பினார்கள் . போலீசார் அந்த இடத்தில் எந்த பொருளையும் எடுக்கவில்லை என்றால் சரிதான் . அஸ்மா எனக்கு போன் செய்து என் வீட்டுக்காரர் இறந்துகிடக்கிறார் என்று மட்டும் தான் சொன்னார் என்றும் வேறு எந்த தகவலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என் வீட்டுக்காரருக்கும் , குள்ளாவிற்கும் இதற்கு முன்பாக எந்த சண்டையும் , தகராறு ஏற்பட்டதில்லை என்றால் சரிதான். அதன்பிறகு நான் பாடியை அரசு மருத்துவமனைக்கு போய் பெற்றுக்கொண்டேன் என்றும் வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான் . குள்ளா தான் கொலை செய்துவிட்டான் என்று நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல . நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை.

VASUDEVAN DAMODARAN

Additional District Judge

Digitally signed by VASUDEVAN DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 268 of 2022**

Prosecution witness LW1 (PW1) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 03.07.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.பாஷா | Father Name | : | திரு.யாரப் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் ஒசூரில் காலேகுண்ட பார்வதி நகரில் வசித்து வருகிறேன் . நான் கொத்தனார் வேலை செய்கிறேன் . என் அம்மா பெயல் சல்மா , என் அப்பாவும் கொத்தனார் வேலை செய்து வந்தார் , ஸ்கிராப் வாங்கி விற்கும் தொழிலும் செய்து வந்தார் . 2022 வருடம் 4ம் மாதம் 1 தேதி வெள்ளிக்கிழமை நான் தர்கா போய்விட்டு வெள்ளிக்கிழமை தான் நான் வீட்டிற்கு வந்தேன். அன்று மதியம் 12.30 மணிக்கு என் சித்தி அஸ்மா எனக்கு போன் செய்தார் என் அப்பாவை சாகடித்துவிட்டர் என்று போன் செய்தார். சனச்சத்திரம் ஒயின் ஷாப் அருகே குள்ளா சந்தோஷ் என்ற நபர் அவர் வீட்டின் அருகே என் அப்பாவை அடித்துவிட்டதாக போனில் தகவல் சொன்னார். குள்ளா (எ) சந்தோஷின் அக்காவை அவர் மாமா கொலை செய்துவிட்டார். அந்த அக்காவின் மாமாவும் ஒரு பாய் தான். இந்த சம்பவம் நடப்பதற்கு 2 வருடம் முன்பு சந்தோஷின் அக்கா கொலைச் செய்யப்பட்டார். சந்தோஷின் மாமாவும் என் அப்பாவும் நண்பர்கள். இந்த கொலை

சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் . புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் **Ex.P.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான் . புகாரில் என்ன டைப் செய்யப்பட்டியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது . புகாரிலுள்ள கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் . அவ்வாறு கையெழுத்து போடும்போது மாலை 5.30 மணி இருக்கும் . காவல் நிலையத்திற்கு நான் அம்மா , சித்தி அஸ்மா ஆகியோர் போய் இருந்தோம் . அப்போது குள்ளாவை காவல் நிலையத்தில் உட்காரவைத்திருந்தார்கள் . போலீசார் குள்ளா வீட்டிற்கு மதியம் 2.00 மணிக்கு போனார்கள். சுமார் அரைமணி போலீசார் குள்ளால் வீட்டில் இருந்தார்கள் அதன் பிறகு ஸ்டேசனுக்கு வந்துவிட்டார்கள் . குள்ளா அடித்ததை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான் . அன்று ஒருநாள் தான் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் மறுபடியும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். குள்ளாவிற்கும் என் அப்பாவிற்கும் எந்த விரோதமும் இல்லை என்றால் சரிதான். அஸ்மா போன் செய்த பிறகு மதியம் 1.30 அவர் வீட்டிற்கு நான் போய்விட்டேன். நான் போய் 10 நிமிடத்தில் போலீசார் அந்த இடத்திற்கு வந்தார்கள். போலீசார் அந்த இடத்தில் கல் எடுத்தார்கள் , பம்பர் எடுத்தார்கள். பம்பர் செடிக்குள்ளே விழுந்துகிடந்தது . அந்த இடத்தில் நிறைய கூட்டம் இருந்தது எனற்ால் சரிதான். எங்கள் வீட்டிற்கும் குள்ளா

விட்டிற்கும் சுமார் 1 1/2 கிமீ தொலைவு இருக்கும். எங்கள் வீட்டில் இருந்து காவல் நிலையம் சுமார் 1/2 கி.மீ தொலைவில் இருக்கும். போலீசார் அந்த இடத்தில் கருங்கல் ஒன்றை எடுத்தார் . என் அப்பாவை குள்ளா தான் அடித்துவிட்டதாக சித்தி தான் சொன்னார் , போலீசார் ஏதும் சொல்லவில்லை. நான் குள்ளா அடித்ததாக சொல்லுவது பொய் என்றும் குள்ளாவிற்கும் இந்த கொலை வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் அது தவறு. குள்ளாவிற்கு எதிராக பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது தவறு. என் அம்மா பெயர் சல்மா.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN